381

கடவுள் துணை.

A

ஸ்ரீமஹா பாகவதமென்னும்

# ஸ்ரீ கிருஷ்ண லீலா

திருப்புகழ் காவடிச்சிந்து.

25 JAN

கோரக்கோட்டை

ப. வடிவேலு செட்டியார் அவர்கள்

இயற்றியது.

பூ. சு. துளசிங்க முதலியார் குமாரான்
பூ. து. மாசிலாமணி முதலியாரவர்களது
சுந்தரவிலாச அச்சுக்கூடத்திற்
பதிப்பிக்கப்பட்டது.
1921.
...ரிஜிஸ்தர் செய்யப்பட்டது. [தனு 3.
...ருசெட்டிவீதி, வேப்பேரி போஸ்டு, மதருாஸ.

Q22:417
N21
17604

உ

கடவுள் துணை.

1

ஸ்ரீமஹாபாகவதம்

என்னும்

# ஸ்ரீ கிருஷ்ணலீலா

## திருப்புகழ் காவடிச்சிந்து.

இது,

கோரக்கோட்டை

ப. வடிவேலு செட்டியாரவர்கள்

இயற்றியது.

க. சண்முக முதலியாரவர்களால்

பரிசோதிக்கப்பட்டு,

பூ. சு. துளசிங்க முதலியார் குமாரர்
பூ. து. மாசிலாமணி முதலியாரவர்களது
சுந்தரவிலாச அச்சுக்கூடத்திற்
பதிப்பிக்கப்பட்டது

1921

[illegible]

[illegible]

[illegible]

3

உ

கடவுள துணை.

# ஸ்ரீமஹா பாகவதம்

என்னும்

176044

# ஸ்ரீ கிருஷ்ண லீலா

## திருப்புகழ் காவடிச்சிந்து

---

## விநாயகர் துதி.

கலி விருத்தம்.

வித்தையும்வளர்நாளுஞ்சிந்தையிற்
பத்திஞானமும்பாக்கியம்பற்பல
வுத்தியுந்தருமுள்ளக்கோயிலின்
சித்தியானையின்சேவடிபோற்றுவாம்.

---

## நாமகள் துதி.

வெண்மலரும் வெண்பணியும் வெண்கலையும்
வெண்மணியும் வேய்ந்து வாச
வெண்மலரின் வீற்றிருந்து பழங்கருணை
பூத்துவண்டு விளரி யாடக்
கண்மலரு மாயிரந்தோ டவிழ்த்தமுகை
நெகிழ்த்த கமலத்தில் வாழெண்
கண்மலருஞ் சதுமுகத்தோ னுவில்வளர்
வாணிபதங் கருத்துள் வைப்பாம்.

---

### இதுவுமது.

பாட்டும்பொருளும் பொருளாற்பொருந்தும்
பயனுமென்பாற்
கூட்டும்படியின் கடைக்கணல்காயுளங்
கொண்டுதொண்டர்
தீட்டுங்கலைத்தமிழ்த் தீம்பாலமுதந்
தெளிக்கும்வண்ணங்
காட்டும்வெள்ளோதிமப் பேடேசகல
கலாவல்லியே.

### இதுவுமது.

என்னடி நான்பெற்றமங்கை என்ற சந்தம்.

அன்னையேகலைவாணி மலர்வேணி கரவீணை-தமி
ழாதாரபுஸ்தக பாணி புவி
யருளுஞ்சது முகவன்னிடை
யமருந்தனி மகளேசரண் அன்
மின்னற்பிரகாசந்தாயே யான்சேயே தமிழ்நீயே-என்
மீதார்வமாயருள் வாயே தந்தி
மிகவும்முனை துணையாகவே
புவியிற்கன மெனநம்பினேன் அன்
சொன்னயமும்பொருள்கூட்டு முப்பாட்டு வழிகாட்டு-நாவிற்
சோனைமாரியென ஊட்செவி
சொல்லும்பல வல்லோர்களை
வெல்லுந்திற வல்லியெனும் அன்
கன்னுமேகாக்ஷரநாரி ஒய்யாரி கெம்பீரி-வடி
வேலன்றமிழ்க்குப காரி ஒரு
வரமேதந் தெனையாதரி
யுயர்வாகிய பரமேஸ்வரி

# சுப்பிரமணியர் துதி.

வண்ணத்தினைமாலை என்ற சந்தம்

பச்சைமயிலேறுந் தீரனே சூர
பத்மனைக்காய்ந்திட்ட வீரனே இரு
பாவையைமணந்தசிங் காரனே உனை
பதமேகதி யெனவேதுதி நிதமேசெயும் வடிவேலனை
பந்தமணுகாது காக்கவே கதி
வந்தவினைகளை நீக்கவே

முத்தர்பணிந்திடும் சித்தனே கும்ப
முனிக்குருவாகிய வித்தனே என
முன்வருவாய்ப்பரி சுத்தனே தனி
முதலாகிய பரமேதிருப் புகழ்பாடலை பெறுசண்முக
மூன்றுதமிழ்வேற்பவட ஐயனே என்றன்
முத்திக்குவித்தான மெய்யனே

சங்கரனுக்குப தேசனே ஓம்
சடாக்ஷரமானப்ர காசனே என்றன்
தண்டமிழ்க்கொள்ளும்விஸ் வாசனே பவரி
தருகுஞ்சர மகளேகரி முகவன்னிளை யவனேசிவ
சாமியெனத்தொடர் தொல்லையே தீர்க்க
தாரிலுனையன்றி யில்லையே

எங்கும்புகழ்பெறுந் துய்யனே யுனை
ஏற்றுவோர்க்கருளு மையனே இந்த
ஏழையையாளமுரு கையனே தின
யிடரும்பெரு மிடியும்பல குடிகேடனை படியிற்கரை
யேற்றுவதெந்தநாள் புண்யனே மனை
சாற்றுஞ்சிவசுப்ர மண்யனே

### மதுரைமாநகரை அரசாக்ஷிசெய்யும்

## கம்சராஜன் சிறப்பு

தெள்ளுதமிழுக்குதவுசீலன் என்ற சந்தம்.

மிக்கபுஜபலமுள்ள வீரன் இந்த
மேதினியையாளுங்கெம் பீரன் அவன்
மீதுபல தேயர்களும் போர்புரிய வந்திடினு
மெதிர்ப்பேபான் உடன் வதைப்போன்

அகிலத்தைதயோர்குடையிலாள் வோன் பணி
யாவர்களுங்கேட்கவுயர்மே வோன் உமை
யரன்பணி செயுந்தவ முடையவன் தேவகியி
னண்ணன் கம்ச மன்னன்

---

## கம்சராஜன் நகர்வலம் வருதல்.

மஞ்சுநிகர் குந்தலுமின்னே என்ற சந்தம்.

சூரியனும்நாணமேகொள்ள விகசிதஞ்சேர் மிகுப்ரகாசத்
தேரடிலக்குக் தேரின்மேல்மெள்ள
சூழமந்திரி போதசேவகர் சூழவேதியே மாநகர்தனை
சுற்றிப்பார்க்க வந்திடுங்காலே
மாடமாளிகை கூடகோபுர
சுந்தரமென்சொல்வேன் மண்மேலே

---

## மதுராபுரி பட்டணச்சிறப்பு

சோமசேகரனருளும் என்ற சந்தம்.

வீதிதோருந்தீபப்பிரகாசம காசம்-காணும்
வெய்பவனிரண்டுகண்கள் கூசும் கூசும்
மாதர்கள் மாவிலேயைக்கட்டி கட்டி-சிறு
மாரியெனவேபன்னீரைகொட்டி கொட்டி
சித்திரக்கவியெனவேகோலம் கோலம்-அவர்
தீட்டுவதைப்பார்க்கவெகுசீலம் சீலம்
யெத்தனேவெயெடுத்திடுவார் ஆலம் ஆலம்-பல
வேதியர்களோதும்மறையோலம் ஓலம்

## கம்சராஜன் மந்திரி பிரதானிகளோடு தேர்மேலேறி நகர் வலம்வருகையில் ஆகாயத்தினின்று அசரீரி சொல்லுதல்.

மஞ்சுநிகர் என்ற சந்தம்.

உலகம்புகழ்கம்சராஜனே அதிதீரனே புஜவீரனே
உத்தமிதேவகிசோதரனே அவள்
உண்மையாகவே பெறுகுசேயரில்
திண்ணதெட்டினி லுதிக்குஞ்சிறுவன்
சேதிப்பானுனதுசிரசையே மனங்கரிப்பான் கனம்பெறுவான்
சேதியையறிகுவாய்நீயே

---

## கம்சராஜன் விசனப்படுதல்

சற்ஜனர்கள் கொண்டாடும் என்ற சந்தம்.

மந்திரியிந்தவிதிக்கென் செய்குவன்ஞானே
செய்குவேன் என் செய்குவேன் மந்

எந்தனின்தங்கையாள் அந்ததேவகியாள்
மைந்தனாலென் னுயிர் சிந்திக்கநேர்ந்திட்டதே மந்

ஆகாயவாணியால் அறையசரீரியால்
யேகமாயென்மனம் நோகவும்நேர்ந்திட்டதே மந்

---

## கம்சன் தேவகியையும், வசுதேவரையும், சிறையில் வைத்து காவலமைக்கும்படி மந்திரிக்குச்சொல்லுதல்

வீரராவண சம்மார என்ற சந்தம்.

பல்லவி.

வசு-தேவன்தேவகியைசிறை செய்வாய்மந்திரி-அந்த
பாவிகட்குகாவலங்கே வைநீதந்திரி

அநுபல்லவி.

ஆவியொழியும்போது பாவம்நினைக்கொணுது
ஆருயிர்பீறவே தேடவேனும்வழியே வசு

சரணங்கள்.

மூன்று மதம்பொழியானை யொன்று
மூதேவி யேறுங்கழுதை யொன்று
முழக்கு பெருமணியமைய வமைத்திடு
அன்றுசெய்பெற
ஆர்வமேவர
அறைசெவியுற வக

## மந்திரி சொல்லுதல்

மலடிவயிற்றுமகன்போலே என்ற சந்தம்.

கரியொடுகழுதைபணியுடனே-பல
காவலாளிகள்படையுடனே-கடுஞ்
சிறையினில்வைத்துமேவந்தேனே-நின் மொழிபோலே
தூதனொருவனும்வருகின்றான்-இவண்
நாடிவருவதாய்த்தெரிகின்றான்-விப
ரீதமென்னதைக்கேட்கின்றேன்-நீ யறிவாயே

## தூதன்

தங்கையுமழுதேங்கிடவே-பெறு
தனையனைகொணர்ந்தேன் தாங்கிடவே-இதை
சங்கையின்றிநீர்வாங்கிடவே-இதோ தந்தேனே

## கம்சன் சிசுவை துண்டித்தல்.

வெட்டினேன்வெட்டினேனிருதுண்டாய்-எழு
வெட்டிமக்களையேகண்டாய்-இனி
[illegible]முன்கொண்டா-அவன் செல்வாயே

# ஸ்ரீகிருஷ்ணபகவான்

## ஜெனனப்பிரவேசமாகுதல்.

கண்ணாயிரம் படைத்த என்ற சந்தம்.

[illegible] சொல்லு[illegible]
[illegible]திரியில் மெய்யன் மிக
[illegible] மெய்யன்

சகணமலர்சொரிய கம்சன்சிரமசிய
கணமிருபுவியினி லொருமகவாகவே வந்தார் அவர்
அனையொடுதந்தையிருவருமேமன கொந்தார்

## ஸ்ரீ கிருஷ்ணசிசு சொல்லுதல்

அன்னை தந்தையர்களே யென்னுல்விசனமென்னே
ஆயர்குலத்துயசோதையிடமெனைச் சேரும் அவ
ளீன்றபெண்ணுகியமாயைதனைக்கொண்டு வாரும்

தெய்வக்குழந்தையின் அநுமதிபெற்ற வசுதேவன் பிறந்த ந்ராத்திரியிலேயே திருவாய்பாடியிலுள்ள இடையர்களுக்கெல்லாந் தலைவனுன நந்தகோபனது திருமாளிகையில் இரகசியமாக சேர்த்துவிட்டு அங்கு அவன் மனைவியாகிய யசோதைக்கு மாயையின் அம்சமாய்ப் பிறந்திருந்தப் பெண் குழந்தையைக் கொண்டுவந்ததும் குழந்தையின் அழுகை யரவங்கேட்ட கம்சன் தேவகியைக் கேட்குதல்.

பாசுபதம் போலே என்ற சந்தம்.

தங்கைபாந்தேவகிகின் தனையனைக்கொண்டா
அதை தரிக்குரேன்றெண்டா
எனை தடுப்பவ ருண்டா
தாமதமேன் பூமியில்நான்
நிலைமையண்டமுன்னே தங்

## தேவகி.

அண்ணுவுன்னடிமலர்க்கே யடியாள்வந்தனம்
அன்பாய்தந்தனம்
திங்கள்பாரீத்தினம்
பாதமறி யாதவிச்
சேனைகாக்கவே அண்

### கம்சன்.

என்சிரம்வாங்கவந்த நின்சிறுவனை
என்னுயிர் பெறுவனை
சிறு குட்டியேமனை

எப்படியான் ஒப்பிடுவேன்
தப்பதாகுதே தன

### தேவகி.

பெற்றவயிரெரியுதண்ணு பிள்ளையைத்தர
நான் புவியினிற்பெற
நீர் உயிரைக்கவர

பெண்ணுள்மனங் குன்னுவதை
யெண்ணிகாருமே அண்

### கம்சன்.

எதிர்த்துமொழிசொல்லுகிறு யேண்டிபாதகி
மதி யில்லாகாதகி
எத்து பேசுந்தோதகி

எனதுவாளி லுனையுஞ்சேயு
மிணைத்துசேதிப்பேன் தன

### தேவகி.

ஐயோவுன்னுயிர்பரிக்கு மாண்மகவல்ல
அழகு பெண்நல்ல
வுன்னுயிர் கொல்ல

அவதரித்த சிசுவதையை
அடைகுவாய்நீயே அண்

கம்சராஜன் மாயையின்அம்ச குழந்தையான
துர்க்கையை தூக்கி வெட்டுகையில் அது
ஆகாயத்தினின்று சொல்லிப்போகுதல்

சனபியாரி என்ற சந்தம்.

அடபாவி கம்சனே
அறியாத துஷ்டனே அட

முடியும்சாய வருகுநாளில்
கெடுமதியை புணர்வதாலும் அட

பூவில்விர — மானவல்ல
தாவியாமோ — என்னைக்கொல்ல — அட
உன்னைக்கொல்ல — ஆயர்பாடி
தன்னிலிருக்கின் — றானைகூடி — அட

ஸ்ரீகிருஷ்ணமூர்த்தியை நந்தகோபனும் அசோதையும் சீராட்டி வளர்த்து வருகையில் சிறுமதலையாய் விளையாடிய கிருஷ்ணன்மண்ணையுண் டதாக வாயைத்திறந்து பார்க்குதய்

மன்றுளாடியவா என்ற சந்தம்.

பல்லவி.

மண்ணுண்ணவாமோ — பாலா — கின்
வாயைத்திற — சீலா — மண்

அநுபல்லவி

வெண்ணெய்தயிர் — பாலிருக்க
அன்னைதந்தை — யருகிருக்க — மண்

சரணங்கள்

என்னவதிசயம் — வாயினுள்காணுது
யீரேழுலகமு — மேதிரேதோணுது
என்கண்கள்பார்க்க — பயமாய்நாணுது
இறையவனிவனே — வறியேன்
திரைகடலறியோ — தெரியேன் — மண்

ஸ்ரீகிருஷ்ணன் சொல்லுதல்

எனை ஆண்டவா என்ற சந்தம்.

அன்னை — தந்தையே
ஆதரித்திருக்கு — மெந்தையே
மன்னுவே — தம்புகல்
முன்னவ — ளனுகும் — அன்
இன்னிலபாரம் — தீர்க்கவுதித்தேன்
உதித்தேன் உதித்தேன் உதித்தேன் உதித்தேன்
இடரேபுரியும் — கொடியருயிரை
மடியவதைக்க — திடமாய்வந்தேன் — அன்

## ஸ்ரீகிருஷ்ணனும், பலராமனும் கோபிகள் வீட்டிற்குப்போய் வெண்ணெயுண்ணுதல்.

சோமசேகரனருளும் என்ற சந்தம்.

### கிருஷ்ணன்.

கூடிஇருபேரும்போவோம் வாராய் வாராய் — அதோ
கூடிக்கோபிவீட்டிற்கே நேராய் நேராய்

### பலராமன்.

னக்குஅவ்விடத்தே கண்ணு கண்ணு — அதை
ராதுவாய்எனக்கேகோர் வண்ணு வண்ணு

### கிருஷ்ணன்.

கோபிகளோடுகூடிசேர்வோம் சேர்வோம் — மதன
பாபிபுமோடகளி கூர்வோம் கூர்வோம்

### பலராமன்.

பதிகள்கண்டால்நமக்கு கஷ்டம் கஷ்டம் — அதோ
திர்காணும்வெண்ணெயின்மேல் இஷ்டம் இஷ்டம்

### கிருஷ்ணன்.

அப்படியேகொணர்ந்தேன் அண்ணா அண்ணா — நீயும்
அப்புடன்சேர்ந்தென்னோடு உண்ண உண்ண

---

## கோபிகாஸ்திரீகள் கிருஷ்ணனை துரத்திக்கொண்டு வருதல்.

அகியாம்பரகண என்ற சந்தம்.

அடடாகிருஷ்ணா ஆகுமோயிந்த அடா
படவெணவோட்டம் பிடிக்கிறாயென்னடா — அட
இப்படிப்பட்டபிள்ளை யெப்படி பெற்றாள் சோதை
ப்போதேவந்தனை அப்பிகமேல் ரக்குதேன். — அட
குலவிடமாட்டேன் கூடவேவருகிறேன்
பிற்றைகப்பட்டால் ஓடாதேஓட்டத்தே — அட

---

## கோபிகாஸ்திரிகள் அசோதை யிடத்தில்வந்து கிருஷ்ணன் செய்திகளைகூறி முறையிடுதல்.

கண்ணாயிரம் படைத்த என்ற சந்தம்.

கிருஷ்ணன்செய்திட்டுவந்த துஷ்டத்தனத்தைதீயும்
கேளடிசோதையே நாளும்எம்மனைக்கே வருகிறான் - மனை
வாளன்றுகினில் தாவியேமுத்தம் தருகிறான்
பாலும்வெண்ணையுமுறி மேலேமேரியெடுத்து
பார்த்திடுகண்கள் பூர்த்திடவெளியே ஓடுறான் - கேட்டால்
பாற்குடுவையால்மோதியேஎங்களை ஜாடுறான்
கொண்ட கணவன்போல அண்டையில்வந்துநின்று
கொண்டைபிடித்து கண்டவரதிய குலுக்கிறான் - கூட
கொண்டாணடித்து சீலையைபிழுத்து கலைக்குறான்
புருஷனிருக்கும்போதே யருகேவந்துபடுத்து
பூவையேயென்மனையாட்டியேயென்று தாவுறான் - நாளும்
போவெனவுரைக்கில் நானடியென்று கூவுறான்
இத்திரமெத்தைமீது நித்திரைசெய்யும்போது
மெத்தெனவந்துவாய்பொத்தியணைவான் தொல்லையே - நாங்க
ளித்தனைபேர்களில் பத்தினியொருத்தியு மில்லையே
எத்தனைநாளபொறுப்போம் இத்ததிவந்துரைத்தோம்
புத்தியவனுக்கு மெத்தவும்சொல்லடி சோதையே - வந்தால்
கட்டியேநாங்களடித்திடுவோம்பெரு வாதையே

## முறையிட்ட கோபிகாஸ்திரிகள்மீது அசோதை கோபித்தல்.

ஆப்தகலந்தரு என்ற சந்தம்.

என்னடிகோபிகள் என்மகன்மீது
என்னேரத்திலுமிவ்வாதா
சின்னகிருஷ்ணன் பால்குடித்திப்போ
சித்திரக்கட்டிலில் படுத்துளான்பார் - என்
டனமனையுரியில் பால்தயிர் வெண்ணெய்
இருக்கட்டுவதனையருந்தாது
தினமனையேதேடி வருவானவன்
திஷ்டேரக்காரிபோடி - என்

தவிழ்ந்திடவறியா பாலகனவனும்
தையலேயவ்விடம் வருவானோ
அவிழ்ந்திடுங்கண்கள் பொய்சொல்லாதீர்
அப்புறம்போடி தப்பிலிகாள் என

மறுபடியும் கிருஷ்ணனும் பலராமனும் கோபிகா
ஸ்திரிகள் வீட்டுக்குள் நுழைந்து அங்குள்ள பால்
தயிர் வெண்ணெய்களை யருந்தியபின்தொழு
வத்திலுள்ள பசுக்களையவிழ்த்து வீட்
டுக்குள் மிரளவோட்டி, அவாள்
கணவர்களை வெளிப்படுத்தி
தாங்கள் சதிபதி விளை
யாட்டேரிகையில்
கோபிகள் கிருஷ்ணனை
உரலில் கட்டுவது

பாலைவாய் கமுகில் என்ற சந்தம்.

அண்டையயல்வீற்றிருக்கும் பெண்டுகளாகிருஷ்ணன்செய்த
அனியாயமென்னசற்றுபாரடி—அவனை
முன்னமேயுரலில்கட்டித்திரடி

கொண்டவனையோட்டிவிட்டு அண்டையில்வந்துபடுத்தால்
கண்டவர்பழித்திடாரோகூறடி—இவன்
பண்டையத்திருடனெனத்தேறடி

இப்படியேகட்டிவிட்டு செப்பிடுவோம்சோதையற்கு
எப்படிமிரட்டிடுவாள்பார்ப்போம்—இந்த
தப்பிதந்திருஷ்டாந்தமாகக்கேட்போம்

பற்பலநாள்வந்தகள்வன் இப்பொழுதகப்பட்டான்
பார்ப்போமொருகையிதனைநாமும்—வஞ்சந்
தீர்த்திடுவோமிந்தநேரந்தாமும்

கிருஷ்ணன்.

என்னடிபெண்ணேகோபிகளா இப்படிநீர்செய்குவது
எச்சல்லவோபகர்ந்துசொல்லடி—நான்
ஆசைபுருஷனல்லவோவிள்ளடி

ஆசைநேசனென்றறிந்தும் நாசகாலிகட்டுவது
ஆணவமானநல்லபேரமே—நானும்
ஆகட்டுமறிவேன்மறுநேரமே

### கோபிகாஸ்திரிகள் ஸ்ரீகிருஷ்ணனை உரலில்கட்டி வைத்துவிட்டு அசோதையிடம் வந்து தெரியப்படுத்துதல்.

லாவணி சந்தம்.

ஆயர்குலதிலகசோதையேஉன்மகன்
அன்யாயஞ்செய்ததைப் பாரு பாரு
நீயில்லையென்றுசொல்லும் மொழிபிசகாகவே
நிட்சயம்வந்தெதிரே தேரு தேரு
கள்ளத்தனமாய்வந்த கிருஷ்ணனையுரலிலே
கட்டிவந்தோமதைக் காணு காணு
விள்ளாதேதில்லுமுல்லும் உரலோடுகண்ணனை
வந்தெதிரேபார்த்து நாணு நாணு

அசோதை.

என்னடிகோபிகளா அன்யாயமாதர்களா
என்னேரமுங்களிட போரா போரா
என்மகன்சின்னகிருஷ்ணன் உங்கள்மனைவந்ததாய்
இயம்புவதும்பெரும் போரா போரா
எத்தனை தடவைநான் எடுத்துரைத்தாலும்நீர்
இப்படியேவரலானீர் ஆனீர்
வித்தன்பால்குடித்து சித்திரதொட்டிலில்
நித்திரைசெய்குரான் காணீர் காணீர்
சங்கையில்லாமலே சிங்காரிகளேசென்று
தனையனைப்பார்த்தெனக்கு சொல்வீர் சொல்வீர்
தங்கள்மேலினியொரு குற்றமுரைக்கவந்தால்
துண்டிப்பேனுங்கள்நாவை செல்வீர் செல்வீர்

கோபிகாஸ்திரிகள்.

அக்காள்தங்கைமாரே வெட்கக்கேடேவந்தது
ஆச்சர்யமென்னசொல்வோம் மாதே மாதே
இக்கணங்கிருஷ்ணனுமிக்கணமிருக்கிறன்
எவ்வாறுவந்திட்டானோ சூதோ சூதோ

## ஸ்ரீகிருஷ்ணன் கம்சனை கொல்லும்பொருட்டு ஆயர் பாடி யசோதையம்மன் வீட்டில் வளர்ந்து வருகிறானென்று, நாரதமகாமுனிவரால் சொல்லத் தெரிந்த கம்சராஜன், விஷப்பாலூட்டிக்கொல்லும்படி பூதகியை அனுப்ப அவள் வந்து யசோதையைக் கேட்குதல்.

தாவடந்தந்தெந்தனைநீவிட்டடி என்ற சந்தம்.

பல்லவி.

தெய்வமேநானென்னசெய்குவேன் அமுர்தங்கட்டி
தைபுத்ரமார் என்னென்றய்குவேன் தெ

அநுபல்லவி.

நையல்யாலுமிந்தபாதை தாங்கிடாது தவிக்கலானேன்
வையகத்திலிந்தபாலே வாங்கயாருமுந்தவகானேன் தெ

சரணங்கள்

யசோதையே அருமைதங்கையே என்பாலருந்த
அழகுங்கிருஷ்ணனை யனுப்புவாய்நீயே
பசபசென்றுமார்புமுருந்து பாலுங்கசிந்துமேலுசொட்டுது
பாதைநீங்கிடபசியுமாரிட பாவையேதயவுசெய்வாய் தெ

## அசோதை

நடுநடுபாதைவழியே மாபாதகியே
நன்றல்லநின்வார்த்தை பூதகியே
நடக்கும்பாதைவிலக்கிவீட்டில் நுழைந்துபாலனைபரிந்துகூவி
யெடுத்தனையாயழைக்கிறயே மட்டிமேசண்டாளிபோடி தெ

என்னிடம்பாலிருக்கலேயோடி வயறுநிறைய
நீகுடுவெறுன்விலகியேபோடி
சின்னகிருஷ்ணனு அழுதிடாதே சிச்சியவளிடம்தாவிடாதே
அன்னவளின்குறியாதோ யறிகுதேன் நீபொறுமிப்பேசாதே

## ஸ்ரீகிருஷ்ணன் பூதகியின்பாலையுண்ணும் போது அதோடு அவள் ஆவியையும் இழுத்துக்கவர அவள் இறந்து விடுதல்.

மேற்படி சந்தம்.

அய்யோவுடலை பிரிக்கலானேனே பாவி கம்சனாலே
ஆருயிர்இழக்க லானேனே
வையகந்தந்த துக்கங்காப்பான் தெய்வமானிடனுகவந்தான்
மெய்யனேஉன்பாதம் போற்றிமேலுலகடைகிறேனென் அய்

## பூதகியை கிருஷ்ணன் கொன்றானென்று கம்சன் கேள்விப்பட்டு அவனை சூதுமார்க்கமாகக் கொல்லும்படி சில அசுரர்களை அனுப்புதல்.

### திருணவர்த்தவசுரன்.

மலையைபற்று என்ற சந்தம்.

கண்ணா கிருஷ்ணா வந்திடுவாய்-மிரு
களிப்புடனே விளையாடிடுவாய்-அதி
தன்னுல்மனமிக உகந்திடுவாய்-மதி நயமாவாய்

### கிருஷ்ணன்.

திண்ணியதோள திருணவர்த்தா-நீ
எண்ணியவெண்ணங்கொன்றிடத்தா-னைை
புண்ணியேயுன்னுயிர் நீங்கிடத்தா-னுன் கொன்றேனே

### வத்சாசுரன்.

ஆயர்பாடியில் வளர்சிலா-மா
தசோதைையர்க்கரும்பாலா-என்னுடன்
நேயமுடன்விளையாடிடுவே-ஸ்ரீ கோபாலா

### கிருஷ்ணன்.

காலைக்கொல்லவந்தாயிக்கணமே-அதற்க்
கிசைந்தேவந்தேன் யான்முனமே-மனத்
தணிவுடன்கொன்றேன் நீயிணமே-என வொழிந்தாயே

### பகாசூரன்.

ஆசையுடன் விளையாடிடவே-வரு
மகாரத்தோமுரைகொன்றிடவே-நீ
ரோஷமிவைப்பது சரியலவே-இனந் தணிவாயே

### கிருஷ்ணன்.

சரிச்சரியேபக்கா சூரா-நான்
அறிவேன் சூழ்ச்சியை கேளசுரா-உனக்
குரியோருனையும் இனித்தேரா-வழி யொழித்தேனே

கிருஷ்ணனை கொல்லும்படி அனுப்பிய அசுரர்
கள்யாவரும் மடிந்தார்களென்று கம்சன்
தெரிந்து எவ்விதசூழ்ச்சியிலாவது கிரு
ஷ்ணனைக் கொல்லக்கருதி கம்ச
ராஜன் மகாமகம் செய்வதாய்
கிருஷ்ணனையும் பலரா
மனையும் பறையறிவி
த்து தருவிக்குதல்.

ஆறுமுகவடிவேலவனே என்ற சந்தம்.

தந்திரத்திலுயர் மந்திரியோநானுஞ்
சங்கல்பங் கொண்டதை கேளாய்
சொந்தமாயாதொரு மாமகஞ்செய்திட
சூட்சிகண்டேன் வெகு நாளாய்
அந்தமகத்திற்கு எந்தவிதத்திலும்
ஆயர்பாடிகண்ணன் வருவான்
எந்தவிதத்திலும் அன்னவசிரசை
யிடறச்செய்தேயுயிர் பெருவேன்

### மந்திரி சொல்லுதல்.

ஆதிபராபர மானப்பரம்பொரு
அவதானஞ்செய்தா ரிப்போதே நீயும்
சூதுமார்க்கமாக கொல்லமுயன்றிடில்
தான்பம் வருகும்பின் றிதே

### கம்சன் சொல்லுதல்.

கூறியபடியே கூறிடுவாய்பபறை
கூவிலுயிர்பெற்று உய்வேன்
மீறினதிர்க்திடில் ஆணதாகட்டென்று
முன்னேயுன்சிரசை செய்வேன்

### பறையறிவித்தல்.

மதுராநகராளும் அதிபன் கம்சராஜன்
மாகாமகம்செய்திடு வாரே
பதியிலுள்ளபலர் யாவரும்வந்துமே
பண்பாயாசி கூர்வீரே.

### பறையினொலிகேட்ட ஸ்ரீகிருஷ்ணனும் பலராமனும் விஜயஞ்செய்தல்.

ஷாதிகேச மன்மே என்ற சந்தம்.

கழறும்பறையை கேட்டோம்தீயே கம்சன்கோட்டைக்கே
கம்சன் கோட்டைக்கே கம்சன்கோட்டைக்கே
கடுகவேநடப்போம் முடிக்கும் மகத்திற்கே
முடிக்கும்மகத்திற்கே முடிக்கும்மகத்திற்கே
முன்னமே-நன்னய-மாகச்செல்லுவோம் (கழ)

### ஸ்ரீகிருஷ்ண மூர்த்தியும் பலராமரும் கம்சராஜன் கோட்டைவாயிலில் நுழையும்போது இவர்களைகொல்லுதற்கு யத்தனித்து வைத்திருந்த யானையசுரசேனைகம்சன்முதலியோரை சம்ஹரித்தல்.

உக்ரமிக்கதக்க என்ற சந்தம்.

வல்லமதங்கொண்டு கொல்லவரும்யானை தானே-யானை
வெல்லமுடியுமா கொல்லுமேறுனை நானே-எதிர்
சொல்லுமரக்கர்கள் உள்ளபலரையும்
துணையாகவே வருவோரையும்
ஈனமேயுயிர் விடசெய்தனன். (வல்ல)

### கம்ச ராஜன்.

எந்தனிட புஜ பலமுந் தனைமனத் தெண்ணு-இவன்
வந்தபலரையுங் கொன்றிடலானயேகண்ணு-இனி
செந்தணலாகவே சிந்தையெரியுது-இதோ
சிதைப்பேனுனை வதைப்பேனுயிர்
பதைப்பேனுன்றன் கதிபாரடா (எந்

### கிருஷ்ணன்.

மெத்தகெருவமாய் இத்தரணியாள்வீரா-உந்தன்
இத்துக்கொண்ணிடஞ் செல்லாதடா கம்சதீரா-உடல்
சத்திபதல்லை தந்திவிழும்படி
பலமாகவே நீலமீதினில்
உடல்வேறதாய் படசாய்த்தனன். (மெத்)

## கோபிகாஸ்திரீகள் ஜலக்கிரீடைக்கு செல்லுதல்.

ஏனோ என்மேல்பழி என்ற சந்தம்.

போவோம் ஜலக்கிரீடை யாடவே
பூவைகாள் வாருங்கள்
நாவியேந்திகரை சேருங்கள்
சாமதாராகுணா ராமிவச்சலா
தாணிமாமியே சத்தியே கோகிலா
காவி பாரதி அமலி சாரதிவா
விமலி சுந்தரி கடனியேவா
வையுமே சீலையை
ஒய்யாரமாய் கரைமேல்மர
செய்வோம் ஜலக்கிரீடை நாமுமே
அய்யமனமகிழத்தினமே

## கிருஷ்ணன் கோபிஸ்திரீகளது ஆடைகளை எடுத்து புன்னைமரத்தில் கட்டிவிட்டு ஆனந்திக்குதல்.

வெள்ளிமலை யொத்த என்ற சந்தம்.

அன்னைபிதாவுமொரு ஆர்வம் - கரை
அடுத்தயிருவருமே சேர்வம்

வண்ணபல சேலைகளுமெண்ணில்கிடந்தனை நா
மெடுப்போம்-புன்னை-தொடுப்போம்

### கோபிகாஸ்திரிகள்.

ஆய்யய்யோ இதுவென்ன கோரம்-நம
தாடைகளைகாணேமின் னேரம்-இங்கு
யாரோவந்து ஆடைகளை சோரமாககொண்டுபோனார்
அறியோம் அதை தெரியோம்
ஓடுகிறான் கிருஷ்ணனதோ தக்க[illegible]மே
துடைகளையெடுத்துமே நங்க[illegible]-பெரு
ஓட்டமாய் பிடித்திடுவோம் கூட்டமாக [illegible]ருங்கடி.
நேரே புன்னை பாரே

### கோபிகாஸ்திரிகள் புன்னமரத்தின் கீ[illegible] சேலைகளோடு மேலிருக்கும் கிருஷ்ணனை வருந்தி தங்களுடைய சேலைகளை கேட்பது.

போவோம் வராயசாமி என்ற சந்தம்

கோகுல பாலா சேலை கோபிகளுக்கேயருளும்
சாக்கவபிமானத்தன்னை கண்ணாவுன்றாள் பணிந்தோம் (கோ)
சோதைதரும் சுதனே சுத்தபரிபூரணனே
ஆதரம் வேறுயில்லை ஆண்டவநின்றாள் சரணம் (கோ)
பூதகிப்பாற்குடித்த போதப்பிரகாசனே
சோதியாகேயின்னமும் தோகையர் விட்டடைய (கோ)
கம்சன்சிரமொழித்த காயாம்பு வண்ணாதின்னா
இம்சைசெய்யாதேயின்னம் இவ்விடமேகவேணும் (கோ)

### கிருஷ்ணன்.

கொடுப்பன்கொடுப்பன்சேலை கோபிகாளென்வார்த்தைகேளும்
எடுப்பீரீன் நுகரமென்னை நோக்கிமேலே தாக்கி (கொ)

### கோபிகள்.

தேவனின்சொற்படிக்கே சேவித்தோங்கரங்கூப்பி
கோவலா தாருஞ்சேலை கோவிந்தா கோபாலா (கோ)

# ஸ்ரீகிருஷ்ணபகவான் மாடு மேய்ப்பது.

இராகம்-ஆனந்தபைரவி-தாளம்-ஆதி

பல்லவி,

மாடுகன்றுகள் மேய்த்தாராம் கிருஷ்ணன்
ட்டறைபோட்டறையோ வென்று மாடு

அநுபல்லவி.

மாடுகன்றுகள்மேய்த்தார் மாதவன்கானகத்தில்
காடுமிடையரைப்போல் நாராயணன்வனத்தில் மாடு

சரணங்கள்.

கோலுங்குடலையுங்கைகொண்டு கோபாலகிருஷ்ணன்
கோலுங்கொப்பருதோளில்பூண்டு-நாலுனன்றியே
மேலுமுரளியூதி நின்று-விஜயமுடன்
மாலுங்கோலமேனிமகிழ்ந்து இடையரைப்போல்
சிலன்மனங்களித்து திரிந்துதோழர்களுடன் மாடு

காடுமேடுபள்ளத்தில் பாய்ந்து காமதேனுக்குள்
நாடிப்பசும்புல்லுகள் மேய்ந்து நயந்துகண்ணன்
வாடிகூகூவெனசேர்ந்து வருத்தமாக
ஓடிப்பிரிந்தமாட்டை தேடியதன்பின்றலே
ஆடிவெய்யலில்மேனிபாடி டிலறவென்று மாடு

அமுர்தவல்லி யம்புஜவல்லி அலமேல்வல்லி
குமுதவல்லி கோமளவல்லி கோகிலாவல்லி
விமலவல்லி விஜயவல்லி யேயென்றுசொல்லி,
கமலவல்லிவாவென்று கண்ணன்நங்கையழைக்க
விமலரங்கேதழைத்து மெய்யோருங்கானகத்தில் மாடு

சிறந்தட்டறைவென்று மாடோட்டி சின்னயருபன்
விறைந்தமாட்டை விலங்கிறைக்கட்டி நித்யகல்யாணன்
கறந்தபால் குடத்தினில்கொட்டி கருணையினில்
அறிந்தமாட்டைமடக்கி அனைவர்களையுஞ்சேர்த்து
சிறந்ததமிழ்விற்றமிழ் பொருந்தத்திருமாலங்கே மாடு

## காளிங்க நர்த்தனம்,

செஞ்சின்மாநகர் என்ற சந்தம்,

காளிங்கன்

சொஞ்சமேனும்பயமின்றியே யென்னிடம்
மிஞ்சியேவந்தவ னாரடா-அட
பஞ்சையே வுன்பேரை கூறடா

கிருஷ்ணன்

என்னடா காளிங்கா ஏடாகூடமாக
என்னிடம்பேசிடுந் திண்ணனே-நான்
உன்னுயிர்வாங்கிடுங் கண்ணனே

காளிங்கன்

என்னுவிபட்டிடில் ஐந்துகாதவழி
யாவுமழிந்திடுங் கேளுமே-இதை
நீயுமறிந்துமே மீளுமே

கிருஷ்ணன்

என்வீரம்பாரடா வுன்சிரமேல் காலை
எடுத்துவைத்திதோ நான் மிதிக்கிறேன்-சீறி
எதிர்த்திடி லுன்னுயிர் வதைக்கிறேன்

காளிங்கன் மனைவிகள்,

காளிங்கநர்த்தன கோகுலபாலனே
காதலனுருயிர் தாரும் பிழை
கர்த்தனே மன்னித்து காரும்

கிருஷ்ணன்

அப்படியேதந்தேன் ஒப்புடனேவெளி
யாகவேகரை யேறும் நல்
வாருடன்வாழ்குவீர் நீரும்

கோகுல வாசிகள் வழக்கப்படி தேவேந்திரனை நோக்கி
பூசையிட ஆரம்பிக்கையில் கிருஷ்ணன் தடுத்து
வேறுபூசையிட ஆக்ஞாபித்து அதனைதான்
ஆவாகனஞ்செய்வதை அறிந்த இந்தி
ரன் கோபித்து அதனைதடைப்படு
த்துமாறு கன்மாரிபெய்யும்
படி வருணனை ஏவ
கிருஷ்ணமூர்த்தி
கோவர்த்தன
கிரியை

## குடையாக பிடிக்குதல்.

வெள்ளிமலை யொத்த என்ற சந்தம்.

இமையவர் கோனுல்மாரி பெய்ய-அங்கு
இருக்குமாதவரெல்லாம் நைய்ய-கண்டு
இடையோர்குலவருமாயனும் திடமாகவம்மலைதன்னையு
மெடுத்தார் குடை பிடித்தார்

## ருக்மணி கல்யாணம்.

திருவுற்றிலகு என்ற சந்தம்

மன்னன் பீஷ்ணுராசனீன்றநன்குணருக்மணிமாதை
மாயவன் மணம்புரிய கோரி-சிசு
பாலனையுமாளும்படி சீறி
மதுரையில்கொடு வந்தவனை
வதுவைபலரு மறியசெய்து
மகிழ்ந்தனன் நித்தியகல்யாணன்-துதி
புரிந்தவர்கருளுங் குழற்கியானன்

## சாம்புவந்தன் வதை.

வந்தவேளை என்ற சந்தம்.

கிருஷ்ணன்

பொல்லாதசாம்புவா நில்லாதேயுள்ளே
புறப்படுவாயடா நீ வெளியே

னல்லாமறிவேன் வல்லாண்மை காட்டாதே
எட்டாதாவடம் கொட்டா நீயே

சாம்பு வந்தன்.

கரடியென்றென்னை நினைத்து வந்தாயடா
காட்டாதே ஆயர்குல கூட்டத்தவா
கரடியாய்ப்பட்டு மடிவாயடா
காட்டுமேறன் பாறெந்தன் தாஷ்டிகத்தை

கிருஷ்ணன்.

வாயைகிழித்தேன் மண்மேல் விடுத்தேன்
ஆவி கொபோக்கி பொழித்தேனடா
தியனேயினியுன்னை லாவதென்ன
தீரமெங்கே உந்தன் வீரமெங்கே

சாம்பு வந்தன்.

...த்தேன் தாவடம் சாமியென்றே தெரிந்தேன்
சகலோகசாயுஜ்யமீ யுமையா
நந்தாமுகுந்தா கோவிந்தா வைகுந்தா
நாராயணா வுன்னடி சரணம்.

## சத்தியபாமா திருக்கல்யாணம்.

### கல்லார்க்கும் என்ற சந்தம்.

சீரார்மழைமுகமுகு மாவிலைகள் சூழ
சித்திரம்பொருந்து மண்டபங்களுபர்வாக
பேரார்வாத்தியவொலி கணகணென்றேகொட்ட
பேசுமறையோர்கிரியை நேசமதாய்பண்ண
காரார்குழல்மடவார் மங்களங்கள்பாட
கண்ணன்மணக்கோலமாக மண்டபத்தேநீட
எராருஞ்சத்தியபாமையருகினிற்கூட
எந்தைபிரான மாங்கல்யம் சூட்டினார்மங்களமே

கிருஷ்ணன் மதுரையில் கிடூறண ஸ்நானம் செய்யப் போகையில் பின்தொடர்ந்த கோபிகளைநோக்கி, நீங்கள் முன் ராமஜனனத்தில் தண்டகாரண்யத்தில் ரிஷிகளாக பரிதாநீர்

அப்போது என்னை ஆலிங்கனஞ் செய்யக்கோரியதால் நான் கிருஷ்ணாவதாரத்தில் நீங்கள் கோபிகைகளாக அவதாரம் செய்வீர் அப்போது அவ்வாறே யணைவேனென வர மீந்ததால் அதுபோல் நிறைவேறிற்று இனிநீங்கள் வனஞ்சென்று பழய படியே தவமார்க்கத்தை யடையுங்களென்று விடைதர, அவர்கள் பெற்று கண்ணனை தோத்தரித்துச் சென்றனர்.

## ஸ்தோத்திர நாமாவளி.

அரிஹரிஹரிஹரி நாரணனே
ஆண்டருளும்பரி பூரணனே
இருடிகள் துதிக்குங் கார்வண்ணா
ஈஸ்வரதத்துவ மலர்க்கண்ணா
உண்மயஞான பரம்பரனே
ஊரும்பேர்கொளுந் தர்ப்பரனே
எண்ணுமெழுத்து மானவனே
ஏகபரம்பொரு ளானவனே
ஐயாவமரர் வற்புதனே
ஐம்பொறிபூதத் தத்துவமே
ஒன்றாய்பலவாய் நின்றவனே
ஓமெனும்பிரணவத் துரைபவனே
ஔவியமில்லா நல்லருளே
அஃரமந்திர மாம்பொருளே
மங்களம். மங்களம். மங்களம்.

ஸ்ரீகிருஷ்ண லீலா
திருப்புகழ் காவடிச்சிந்து
முற்றிற்று.

# விளம்பரம்.

துஷ்டப்பெண்களின் புணர்ச்சியினாலுண்டாகும்
வெள்ளை, கொறுக்கு, அரையாப்பு, முதலானதற்கு

## சஞ்சீவி யெண்ணெய்.

இந்த எண்ணெயினால் தீரும் வியாதிகள் அனேகமும் முக்கியமாய் ஸ்திரீகள் வியாதியினால் இரத்தங்கெட்டு திரேகம் வெளுத்துமயிர்கள் உதிர்ந்து பலயீனப் பட்டவர்களும், நெடுநாளாக தீராததிரேகத்தில் ஊறிய மேகவெள்ளை, பாலவெள்ளை, ஒழுக்குவெள்ளை, மஞ்சள்வெள்ளை, நீருடன் நூலைப்போல்வருதல், தந்திமேகம், நீர்சுருக்கு, மூத்திரயெரிவு, நீர்தாரைக்கடுப்பு, குழிப்புண்கள், புரைபோடுகிற புண்கள், யோனியில் உண்டாகும் ரணங்கள், லிங்கத்தில்உண்டாகும் கொறுக்குப் புண்கள, அரையாப்பு, தொடைவாழை, திமிர்வாய்வு கைகால் விரல்களிலுண்டாகும் மேகப்பிடிப்பு, கிரந்தி, படைகிரந்தி, சிறுகிரந்தி, நுணைக்காய்கிரந்தி, இன்னும்பலவிதமான கிரந்திகளும், பலவிதமேகத்தடிப்பு படைகளும், கைகால் குடைச்சல், எலும்புருக்கிமேகம், கை கால் ஊதல் முதலான வியாதிகளெல்லாம் சூரியனைக்கண்ட பனிபோல்நீங்கி திரேகமும் முகமும் நல்லபசுமையான காந்தியையுண்டாகும்.

இதேவியாதி பெண்களுக்கிருக்குமாகில் புருடரைவிட அதிசீக்கிரத்தில் நிவர்த்தியாகும் உள்ளூரிலும் வெளியூரிலும் அனேகசனங்களின் துன்பத்தைநீக்கி சவுக்கியத்தை யுண்டுபண்ணி அனுபவத்திற்குவந்த யெண்ணெய்.

டப்பி விலை ரூபா 2 0 0

## கைமுறை பாக்கெட் வைத்தியம்.

இதில் வைத்திய பாகங்களெல்லாம் சுலபமாய் தாங்களே செய்துக்கொள்ள கூடியதாய் சுமார் 600 முறைகளுக்குக் குறையாமல் அடங்கி யிருக்கிறதுஎப்பொழுதும் பாக்கெட்டில் வைத்துக்கொள்வதற்காகவே சிறிய பாக்கெட்பஞ்சாங்க அளவில் உயர்ந்தசடிதத்தில் அச்சிட்டு புல்கவிகோபயிண்டு செய்துவெகுநேர்த்தியாக தங்கவிலிட்டில் கைமுறை பாக்கெட் வைத்தியமென பேர்குத்தி யிருக்கும்.

இதன் விலை ரூபா-1.

# அகடவிகட அமிர்த ரஞ்சனி.

இக்கதையில் விளங்கும் சாராம்ச மனைத்தும் வாசிக்கும்போதே வயறு குலுங்க சிரிக்கும்படியான விகட விநோதக் களஞ்சியமா யிருக்கும், ஒரு தடவைவாசித்தாலும் பலதடவை வாசிக்க வேண்டுமெனும் ஆசை அவரவர்கள் மனதை விடாமலிருக்கும். இந்த "அகட விகட அமிர்த ரஞ்சனி" யென்னும் புத்தகமே அறிவுக்கு ஆதாரமான புத்தகமென்று நமது அஸ்த பூஷணமாக சதாகாலமும் தமது கையில் வைத்துக் கொண்டே வாசித்திருக்கும்படியான அதியற்புத ரசக்கியானம். இதில் விளக்கும் அம்ஸங்களோ எல்லாம் விகடம், எல் லாம் வேடிக்கை, எல்லாம் தமாஷ், எலலாம் சிரிப்பு, எல்லாம் ஆனந்தம், எல்லாம் ஞானம், எல்லாம் அறிவுக்கு ஆதாரமான கதாசாரமாக இருக்கும்.

புத்தகம் 1-க்கு விலை அணா-8

# நோயில்லா வாழ்வு.

சாரீரசாஸ்திரம், சுவனசாஸ்திரம், மாதவநிதானம், பதார்த்தகுண சாலநிதி இப்போர்க்கொத்த உயர்ந்த சாஸ்திரங்களில் ஆராய்ச்சிசெய்து அச்சிட்ட இந்தப் புத்தகம் சகல வருணத்தாருக்கும் ஒவ்வொன்று இருக்கவேண்டியது அவசியம்.

புத்தகம் 1-க்கு அணா-12.

# அஷ்டதிக்கு ஆரூட சாஸ்திரம்.

இந்த (அஷ்டதிக்கு ஆரூட சாஸ்திரத்தை) யாரொருவர் கையாண்டு கேட்டுத்திருத்திக் கொள்வார்களோ அம்மகாநுபாவர் மற்ற மானிடர் யாவருக்கும் திரிமூர்த்திகள்போல நடக்கும் நன்மை தீமைகளைப் பார்க்கலாகும். இச்சாஸ்திரத்தில் இந்திரன், அக்கினி, இயமன், நிருதி, வருணன், வாயு, குபேரன் ஈசானியன், முதலிய அஷ்டதிக்குகளில் எத்திக்கையொத்து பிரஸனை கேட்கிறார்களோ அத்திக்கின் பலனை அனையாளத்துடன் ஆனந்தமடையுமாறு அறையலாகும். இதில் அஷ்டதிக்கு ஆரூடம், பஞ்சபக்ஷி ஆரூடம், ஆஞ்சநேய ஆரூடம், ஜெயமுனிவராரூடம், வால்மீகராரூடம் ஆக ஐந்துவித ஆரூடங்களும மைந்திருக்கின்றது. உயர்ந்தகடிதத்தில் அச்சிட்டது.

புத்தகம் 1-க்கு அணா 12

---

ஒரு ரூபாய்க்கு குறைந்து ஆர்டர் செய்கிறவர்கள் தபால் முத்திரையை வாங்கி கட்டணத்துடன் சேர்த்து அனுப்பினால், நல்லது இல்லாவிடில் வ். பி. அனுப்பமுடியாது.

எமது விலாசம்.—பூ. க. துளசிங்கமுதலியார். அண்டு சன்ஸ்.
நெ. 3 25. வல்லம் பங்காருசெட்டி வீதி, வேப்பேரி மதராஸ்.

சகல விரைநோய்கட்கு

# வச்சிர பீஜ தைலம். 30

இந்த தைலத்தினால் விரைவீக்கம், விரைநோக்காடு, விரைநரம்பு புசன் தடிப்பு, விரையை அடுத்த நரம்புகள் இழுப்பு, அடிக்கடி வீங்கியுந் தளர்ந்து மாறிமாறிவரும் சுபாவநோய்கள் இன்னும் விரையைச்சார்ந்த எல்லாவித வாதநோய்களையும் கண்டித்து சவுக்கியத்தை உண்டுபண்ணுவதில் இந்த தைலத்தைவிட சிறந்த அவிழ்தம் வேறே கிடைக்காதென்று முழு தைரியத்துடன் சொல்கின்றோம். கஷ்டமான பத்தியமுமில்லை. பத்திய கோடிசில் எல்லா விபரங்களும் தெரிந்துகொள்ளலாம்.

ஒரு ஆழாக்கு தைலமடங்கிய ஒரு டப்பியின் விலை ரூபா 2-0-0.

பதின் மூன்றுவித

# ஜன்னிகட்குத் தைலம்.

இந்த தைலத்தை வாரத்திற்கு இரண்டுவிசை சனிக்கிழமை புதன்கிழமை ஸ்நானஞ் செய்துவந்தால் ஒத்தைத் தலைநோய், இரட்டைத் தலைநோய், எப்பொழுதும் விடாத் தலைநோய், தலைபாரம், புரக்கழுத்திசுப்பு அல்லது புரங்கழுத்து நோப், முதுகு ஜிலுஜிலுப்பு, கைகாலில் வியர்வை சொரிதல இவைகள் யாவும் இரண்டு மூன்று ஸ்நானத்திலேயே சூரியனைக்கண்ட பனிபோல் சீக்கிரத்தில் நிவர்த்தியாகும். அநேகருக்கு அனுபவப்பட்டது.

ஒரு ஆழாக்குத் தைலமடங்கிய ஒரு டப்பியின் விலை ரூபா 1-8-0.

# சந்தனாதித் தைலம்.

இந்த அருமையான சந்தனாதித்தைலத்தை வாரத்திற்கொரு விசை தலைக்குத் தேய்த்து ஸ்நானஞ் செய்துவந்தால் 4-5-வித பித்த மேகங்களும் தலைசுழட்டல், வாந்தி, மயக்கம், பித்தசுரம், கைகால் குத்தல், எரிவு, மயக்கம், கண்ணெரிச்சல், காதடைப்பு, காதுமந்தம் காதிரைச்சல் முதலானதால் சீதளத்தினாலுண்டாகும் நோய்களையும் சூரியனைக்கண்ட பனிபோல் நீங்கிவிடும். இவ்வகை அற்புதமான தைலம் 5-வயது குழந்தைகள் முதல் ஸ்நானஞ்செய்யலாம். மிகுந்த பரிமளமாகவுமிருக்கும்.

ஒரு ஆழாக்கு தைலமடங்கிய ஒரு டப்பியின் விலை ரூபா 1-8-0.

☞ மேற்கண்ட மருந்துகள் தேவையுள்ளோர்கள் அடியில் கண்ட விலாசத்திற்கு எழுதி பெற்றுக்கொள்ளவும்.

எமது விலாசம்:—

பூ. து. மாசிலாமணி முதலியார்

சுந்தரவிலாச அச்சுக்கூடம்

நெ. 3-25, வல்லம்-பங்காருசெட்டி வீதி, வேப்பேரி போஸ்டு, மதராஸ்.